# 02-12-2024 செய்தி

## பசுமைக் கண்துடைப்பா பாகு காலநிலை மாநாடு?

- அசர்பைஜான் தலைநகர் பாகுவில் நவம்பர் 11 முதல் நவம்பர் 22ஆம் தேதி வரை, 29ஆவது காலநிலை உச்சி மாநாடு (Conference of Parties - COP 29) நடைபெற்று முடிந்திருக்கிறது.
- காலநிலை சார்ந்த நிதி ஒதுக்கீடு முடிவுகளை எடுப்பதே முக்கிய நோக்கம் என்று முன்பே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், இது 'நிதி உச்சிமாநாடு' (Finance COP) என்றும் வல்லுநர்களால் அழைக்கப்பட்டது.
- மாநாட்டில் சில முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்றாலும் பெரும்பாலான செயல்பாடுகள் ஏமாற்றம் தருபவையாகவே இருக்கின்றன.

**தலைவர்களின் பங்களிப்பு குறைவு**

- அமெரிக்கா, சீனா, இந்தியா, ஜெர்மனி, பிரேசில் போன்ற முக்கிய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்கவில்லை.
- 'காலநிலைப் பிரச்சினை எவ்வளவு தீவிரமானது என்பதை இந்நாடுகள் புரிந்துகொள்ளவில்லை என்பதை இது வெளிப்படுத்துகிறது'.
- கடந்த உச்சி மாநாடுகளில் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான நிதி ஒதுக்கீடு பற்றிப் பல்வேறு பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.
- இதற்காக 100 பில்லியன் அமெரிக்க டாலர்கள் தருவதாக வளர்ந்த நாடுகள் அறிவித்திருந்தன. இம்மாநாட்டுப் பேச்சுவார்த்தையின் முடிவில், 2035ஆம் ஆண்டு வரை ஆண்டுக்கு 300 பில்லியன் டாலர்களைத் தொடர்ந்து தருவதாகவும், இதை நிதி உதவியாகவும் குறைவான வட்டியுடன் கூடிய கடனாகவும் தருவதாக வளர்ந்த நாடுகள் தெரிவித்திருக்கின்றன.
- முடிந்தால் வளர்ந்துவரும் நாடுகளும் சிறிதளவு நிதி அளிக்கலாம், அது கட்டாயமில்லை என்றும் மாநாட்டில் முடிவெடுக்கப்பட்டது.
- இது இம்மாநாட்டின் மிகப்பெரிய சாதனையாகும். அதே வேளையில், இந்த பணம் எப்படிப் பிரித்துக் கொடுக்கப்படும் என்பதிலும், இதற்கு யாரெல்லாம் பங்களிக்கலாம் என்பதிலும் வளர்ந்த நாடுகள் எந்தத் தெளிவான முடிவுக்கும் வரவில்லை.
- வரப்போகும் நிதியை எப்படிச் செலவு செய்வது, யார் அதைப்பிரித்துக் கொடுப்பார்கள், முடிவை எடுக்கும் அதிகாரம் யாரிடம் இருக்கிறது என்பது போன்ற பல கேள்விகளுக்குப் பதில் இல்லை.

**புதை படிவ எரிபொருள்கள்**

- சென்ற முறை துபாயில் நடைபெற்ற உச்சி மாநாட்டில் 'புதைபடிவ எரிபொருள்களிலிருந்து விலகிச் செல்வது' என்கிற முடிவு எடுக்கப்பட்டது.
- இந்த முறை அதைப் பற்றிய பேச்சுவார்த்தை விரிவாக நடந்தது. எண்ணெய் வளங்களை முக்கியமானதாகக் கருதும் சவுதி அரேபியா உள்ளிட்ட நாடுகள் இதை எதிர்த்ததால், மாநாட்டின் இறுதி ஆவணத்தில் எரிபொருள்கள் பற்றி அதிகம் குறிப்பிடப்படவில்லை.
- அசர்பைஜானின் அதிபர் இல்ஹாம் அலியேவ், மாநாட்டின் தொடக்கத்திலேயே, "புதைபடிவ எரிபொருள்கள் கடவுளிடமிருந்து கிடைத்த பரிசுகள்.
- ஒரு நாட்டில் இயற்கை வளங்கள் இருக்கின்றன என்பதையோ, அந்த நாடுகள் இந்த வளங்களைச் சந்தைப்படுத்துகின்றன என்பதையோ குற்றமாகச் சொல்ல முடியாது" என்று அழுத்தமாகத் தெரிவித்திருந்தார்.
- அசர்பைஜானில் எண்ணெய்க் கிணறுகள் அதிகம். ஆகவே, இதுபோன்ற நிலைப்பாடுகளை அசர்பைஜான் எடுக்கலாம். என்பது முன்பே கணிக்கப்பட்டிருந்தது.
- அது மட்டுமல்லாமல் கச்சா எண்ணெய் உற்பத்தி செய்யும் ஒரு நாடு, காலநிலை உச்சிமாநாட்டுக்குத் தலைமை வகிப்பது இது இரண்டாவது முறை, கச்சா எண்ணெயை அதிகமாகச் சார்ந்திருக்கும் நாடுகளில் உச்சி மாநாட்டை நடத்துவது எரிபொருள் பற்றிய சரியான முடிவுகளுக்கு வழிவகுக்காது.

**கரிமச் சந்தை பற்றிய முடிவு**

- பாரிஸ் ஒப்பந்தத்தில் 6ஆவது பிரிவின் கீழ் இது பற்றிய சில வரையறைகள் தரப்பட்டுள்ளன. இதையொட்டிக் கரிம உமிழ்வுகளைக் குறைப்பது, கரிமச் சந்தையை உருவாக்குவது ஆகியவை பற்றிய சில முடிவுகள் எடுக்கப்பட்டன.
- இது சரியான முறையில் நடைமுறைக்கு வந்தால், ஏற்கெனவே கரிம உமிழ்வுகளை உறிஞ்சும் தொழில்நுட்பங்கள் பெருகும். இதன்மூலம் காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்தவும் ஏற்கெனவே வெளியான உமிழ்வுகளைக் கட்டுப்படுத்தவும் முடியும்.
- வெளியிடப்பட்டுள்ள உமிழ்வுகளுக்கு ஈடாக, வேறு இடங்களில் கரிம உறிஞ்சு தொழில்நுட்பங்கள், காடு உருவாக்கம் போன்றவற்றைப் பயன்படுத்தி கரிம உமிழ்வைச் சரிகட்டவும் இந்தப் பேச்சுவார்த்தை வழிவகுத்திருக்கிறது.

**பிற முடிவுகள்**

- 25 உலக நாடுகள், ஐரோப்பிய யூனியன் ஆகிய பிரதிநிதிகளைக் கொண்ட கூட்டமைப்பு, இனிமேல் புதிய அனல்மின்நிலையங்களை உருவாக்குவதில்லை என்று முடிவெடுத்திருக்கிறது.
- "மீத்தேன் உமிழ்வுகளைக் கூடியவரையில் குறைப்பது, மீத்தேன் உறிஞ்சு தொழில்நுட்பங்களை வளர்த்தெடுப்பது" ஆகிய இரண்டு முக்கிய அம்சங்கள் இந்த ஒப்பந்தத்தில் காணப்படுகின்றன.